**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 120/2022**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : கிருஷ்ணன் | சமயம் | : |
| கிராமம் | : துருஞ்சிப்பூண்டி | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 32 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 – 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** அ.சா.1 சங்கர் உடன் ஏரியில் நான் மீன் பிடித்துக்கொண்டிருப்பேன். அதன்படி சங்கர் எனக்கு தெரியும். ஆஜர் எதிரி சிங்கவரத்தை சேர்ந்த முருகன்.

2. துருஞ்சிப்பூண்டி ஊராட்சி மன்ற தலைவர் சேட்டு என்பவர் சிங்கவரம் ஏரியை குத்தகைக்கு எடுத்திருந்தார். நானும், சங்கரும் மேற்படி ஏரியில் மீன் பிடித்து தருவதற்கு கூலிக்கு வேலை செய்து கொண்டிருந்தோம். கடந்த 30.06.2022ந் தேதி மதியம் வரை மீன் பிடித்துவிட்டு நானும், தலைவர் சேட்டும், வீட்டிற்கு சென்று விட்டோம். அதற்குப்பிறகு ஏரி மீன் காவலுக்கு சங்கர் அங்கிருந்தார். அன்றைய தினம் மாலை 4 மணி அளவில் ஆஜர் எதிரி முருகன் அங்கு வந்து சங்கரிடம் சண்டை போட்டுள்ளார். சங்கரை அசிங்கஅசிங்கமாக திட்டி கடப்பாரையால் அடித்து பிறகு அந்த கடப்பாரையால் சங்கரின் காலில் ஆஜர் எதிரி முருகன் குத்திவிட்டார். நானும், தலைவரும் ஏரிக்கு அருகே வந்துகொண்டிருந்தோம். நாங்கள் பக்கத்தில் செல்வதற்குள் ஆஜர் எதிரி முருகன் ஓடிவிட்டார். பிறகு காயம்பட்டுள்ள சங்கரை நானும், தலைவரும் சங்கரை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். செஞ்சி அரசு மருத்துவமனையில் முடியாது என்று கூறியதால் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு எடுத்து சென்றோம். அங்கு உள்நோயாளியாக தங்கி சங்கர் சிகிச்சை பெற்றார்.

**குறுக்குவிசாரணை:**

3. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்களா

என்றால் விசாரிக்கவில்லை. ஏரியை குத்தகைக்கு எடுத்ததற்கான ஏலச்சீட்டு ரசீதை நான் பார்த்தேனா என்றால் இல்லை. சங்கர் பொற்குணம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவத்திற்கு முன்பாக ஆஜர் எதிரியை எனக்கு யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஊர் கட்டுப்பாட்டை மீறி தான் நாங்கள் மீன் பிடித்தோம் என்றால் சரியல்ல. மேற்படி ஏரியில் ஊர் மக்கள் அனைவரும் தினந்தோறும் மீன் பிடிப்பார்கள் என்றால் குத்தகை எடுத்த பிறகு யாரும் பிடிக்கமாட்டார்கள். எந்த தேதியில் குத்தகை எடுத்த தேதி தெரியுமா என்றால் தெரியாது. ஏரி குத்தகை எடுத்தவருக்கு கூலிக்கு வேலைக்கு சென்றேன். அ.சா.1 சங்கர் திருட்டுத்தனமாக ஏரியில் மீன் பிடித்தார் என்றால் சரியல்ல. எங்களுடன் வேலைக்கு தான் வந்தார்.

4. மதியம் 1 மணி வரை மீன் பிடித்துவிட்டு வீட்டிற்கு சென்றேன் என்றால் சரிதான். அதன்பிறகு தலைவர் தான் என்னை மீண்டும் மாலை 4 மணிக்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். மாலை 4 மணி அளவில் துருஞ்சிப்பூண்டி கிராமத்தில் தான் இருந்தோம் என்றால் ஆமாம். நாங்கள் இருந்த இடத்தில் இருந்து சிங்கவரம் ஏரிக்கு வர எவ்வளவு தூரம் என்றால் 10 கி.மீ. இருக்கும். நாங்கள் ஏரிக்கு வந்தபோது எத்தனை மணி என்றால் மாலை 4.15 இருக்கும் . நாங்கள் வருவதற்கு முன்பாக அங்கு என்ன நடந்தது என்று எங்களுக்கு தெரியாது என்றால் தெரியாது. எனக்கும் எதிரிக்கும் சண்டை என்றால் இல்லை. சங்கரை ஆஜர் எதிரி அடித்தபோது நான் பார்த்தேனா என்றால் கடப்பாரையை போட்டுவிட்டு ஓடுவதை தான் பார்த்தேன். கடப்பாரையால் குத்துவதை நான் பார்த்தேனா என்றால் எதிரிதான் குத்திவிட்டு ஓடினார் என்று சாட்சி கூறுகிறார். அப்போது எத்தனை பேர் அங்கிருந்தார்கள் என்றால் சுமார் 4, 5 நபர்கள் இருந்தார்கள். நான் பார்க்கும்போது கடப்பாரை எங்கிருந்தது என்றால் அடிப்பட்டவரின் அருகில் இருந்தது. ஆஜர் எதிரி ஓடும்போது எவ்வளவு தூரத்தில் நான் இருந்தேன்எ ன்றால் சுமார் 15 மீ தூரம் இருக்கும். நாங்கள் நினைத்தால் ஓடிப்போய் பிடிக்க முடியும் என்றால் அதற்குள் ஓடிவிட்டார். நான் கூறுவது போல் சம்பவமே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சங்கருக்கு எப்படி காயம்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் கூறுவது பொய் என்றால் சரியல்ல. மாலை 4 மணிக்கு துருஞ்சிப்பூண்டி கிராமத்தில் தான் நான் இருந்தேன் என்றால் 4 மணிக்கு தலைவர் என்னை கூப்பிட்டுக்கொண்டு வந்துவிட்டார். போலிசார் என்னை விசாரிக்காததால் நான் கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 120/2022**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மஸ்தான் | தொழில் | : விவசாயம் |
| தந்தை பெயர் | : சேட்டு | சமயம் | : |
| கிராமம் | : மேல்மலையனூர் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 39 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 – 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். செஞ்சி போலிசார் சிங்கவரம் ஏரியில் வந்து படம் போட்டார்கள். அப்போது என்னிடம் சாட்சிக்காக கையெழுத்து வாங்கினார்கள். மேற்படி கையெழுத்து 01.07.2022ந் தேதி போட்டேன். என்னுடன் சதாம்உஷேன் என்பவரும் கையெழுத்து போட்டார். நாங்கள் கையெழுத்து போட்ட வழக்கானது சங்கரை கடப்பாரையால் தாக்கிய வழக்கு என்று தெரியும். போலிசார் விசாரித்தார்கள்.

**(2. 01.07.2022 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை**

அன்றைய தினம் ஏரிக்கு போலிஸ் வரும் விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் நாங்கள் மீன் பிடிப்பதற்காக காலையிலேயே அங்கு சென்றிருந்தோம். நான் கையெழுத்து போட்ட தாளில் சங்கர் சண்டை வழக்கு சம்மந்தமாக எழுதியிருந்ததா என்றால் ஆமாம். வேறு ஏதாவது எழுதவில்லை என்றால் எழுதவில்லை. காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு உண்மைக்கு மாறாக சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சொல்கிறேன்எ ன்றால் சரியல்ல. அ.சா.2 சேட்டு எனக்கு அப்பா என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அங்கேயே விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 120/2022**

2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சதாம்உசேன் | தொழில் | : டிரைவர் |
| தந்தை பெயர் | : காதர்பாஷா | சமயம் | : |
| கிராமம் | : மேல்மலையனூர் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 32 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.J. ஆதிமூலம் Gr.1 – 2515 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். 01.07.2022ந் தேதி போட்டேன். செஞ்சி போலிசார் சிங்கவரம் ஏரியில் இருந்தபோது நான் கையொப்பம் செய்தேன். சண்டை வழக்கு என்று போலிசார் சொன்னார்கள். அன்றைய தினம் செஞ்சி போலிசார் படம் வரைந்தபோது அங்கிருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.2 சேட்டு பாய் எனக்கு என்ன உறவு என்றால் எனக்கு சொந்த பெரியப்பா. போலிசார் வந்தபோது நாங்கள் என்ன செய்தோம் என்றால் அங்கிருந்த செட்டை காலி செய்து வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். போலிசார் விசாரணையில் ஏரியில் நின்று கொண்டிருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் சம்பவ இடத்திற்கே நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் படம் வரைந்தது குறித்தும் நாங்கள் அங்கிருந்தது குறித்தும் எழுதியிருந்தார்கள். நான் கூறியவாறு தான் அதில் எழுதியிருந்தது என்றால் ஆமாம். காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு உண்மைக்கு மாறாக சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சொல்கிறேன்எ ன்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அங்கேயே விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.